# தமிழ் - இடைநிலைக் கல்வி (237)

## (அக மதிப்பீடு) Tutor Marked Assignment (2024-25)

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) சிவன் காளீசுவரன் ஆகிய வரலாறு குறித்து எழுதுக. (பாடம் 12)

   (ஆ) சுயஉதவிக்குழு நோக்கம், உருவாக்கம் குறித்து எழுதுக.. (பாடம் 32)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) வேலை வேண்டி விண்ணப்பக் கடிதம் எழுதுக. (பாடம் 14)

   (ஆ) பொதுக் குறைதீர் விண்ணப்ப கடிதம் எழுதுக. (பாடம் 31)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) வள்ளுவர் கோட்டத்தின் தனித்தன்மையை வர்ணித்து எழுதுக. (பாடம் 16)

   (ஆ) தூண்பாறைகள் குறித்து எழுதுக. (பாடம் 15)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் காரணிகள் குறித்து எழுதுக. (பாடம் 17)

   (ஆ) கீழே உள்ள பகுதியினைச் சுருக்கி வரைக. (பாடம் 18)

   சங்க இலக்கியத்தில் இயற்கை

   உலக இலக்கியங்களைப் பயில்வர் வெர்ஜில், உவோர்ட்ஸ், உட்வொர்த்துப் போன்ற மேல்நாட்டுப் புலவரின் இயற்கை ஈடுபாட்டைப் பெரிதும் போற்றுகின்றனர். பேராசிரியர் இரைடர் என்பார் காளிதாசரின் மேகதூதத்தைப் பற்றி ஆராயும் பொழுது அச்செய்யுளில் தோன்றும் இயற்கை ஈடுபாட்டின் தன்மை பிற இலக்கியங்கள் எவற்றிலும் இல்லை என

**Contact for Solutions Unnati Educations 9899436384, 9654279279**

வியந்து வற்புறுத்துகிறார். அன்னார் கபிலபரணர் முதலானோர் இலக்கியங்களைக் கணணுற்றிருப்பரேல், அதனினும் சால வியத்தற்குப் பல காரணங்களைக் கண்டிருப்பர். ஏன் எனின், தமிழ் மக்கள் வரலாற்று முறைமை எட்டாத காலந்தொட்டு நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து, அதன் இயற்கையே பண்பாட்டின் அடிப்படை என உணர்ந்திருந்தார்கள். மக்கள் இயல் வல்லுநர் ஆகிய இலெ ப்லே என்னும் பெரியார் கூறிய இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இனிதுணர்ந்தவர்கள் ஆவார்கள். முலை நிலத்திலும், கடல் நிலத்திலும், அவ்வச் சூழ்நிலைக்கு ஏற்ற பண்பாடே இயற்கையால் அமையும் எனவும், ஆற்றங்கரையை அடுத்துள்ள கழனி நிலங்களில் வேறு பண்பாடு தோன்றும் எனவும் உணர்ந்து நிலத்தினை ஐந்திணையாகப் பிரித்தனர்.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

(அ) கரகாட்டம் குறித்து எழுதுக. (பாடம் 18)

(ஆ) வங்கியில் பணம் எடுக்குடம் படிவத்தை நிறைவு செய்யும் முறைகளை விவரி. (பாடம் 30)

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) பேட்டி காண்பதற்கு முன் செய்துகொள்ள வேண்டிய ஆயத்தப் பணிகள் யாவை? (பாடம் 33)

(ஆ) பின்வரும் கதைப்பகுதியைப் படித்து மீதமுள்ள கதைப்பகுதியை நிறைவு செய்க. கதைக்கேற்ற தலைப்பிடுக. (பாடம் 35)

ஓர் ஊரில் வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது குடும்பம் தினமும் வேட்டையாடி அவன் கொண்டுவரும் மான், புறா போன்றவற்றின் இறைச்சியை உண்டு வாழ்ந்துவந்தது. இந்நிலையில் காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடன் மான்கள் கூட்டத்திற்கு வைத்த அம்பானது குறி தவறி அருகில் இருந்த மரத்தில் பாய்ந்தது. அவன் எய்த அம்பு நஞ்சு தோய்ந்தது என்பதால் மரம் துடி துடித்தது. நாளடைவில் அதில் இருந்து காய்களும், இலைகளும் உதிர்ந்து மரம் பட்டுப்போகும் நிலைக்கு ஆளானது.

மரத்தின் பொந்தில் இருந்த பறவைகள் அனைத்தும் பறந்து வேறு இருப்பிடத்தை நாடிச் சென்றன. ஆனால், அம்மரத்தில் வாழ்ந்துவந்த கிளி மட்டும் மரம், உலர்ந்துபோன நிலையில் இருந்தபோதும், அதைவிட்டுப்பிரிய மனம் வராமல் அங்கேயே தங்கி இருந்தது. நாளாக நாளாக அந்தக் கிளியும் மரத்தைப்போல் சோர்ந்துபோக ஆரம்பித்தது.

கிளியின் கருணை உள்ளத்தைப் பார்த்த கொக்கு ஒன்று கிளியே மரம் உலர்ந்த நிலையில் அதைவிட்டுப் போகாமல் இருக்கும் காரணம் என்ன? எனக் கேட்டது.

மேற்கண்ட கதையில் கொக்கிற்குக் கிளி என்ன காரணத்தைக் கூறியிருக்கும் எனக் கற்பனை செய்து எழுதுக

----------------

**Contact for Solutions Unnati Educations**
**9899436384, 9654279279**